பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 14 ஞாயிற்றுக்கிழமை 27.04.2025 கதிர் 169

## இனி இது ரகசியம் அல்ல!

நேற்று ஒரு நிகழ்வுக்குச் சென்றிருந்தேன். இரண்ட நேரம். திடீரென காரசாரமான அரசியல் விவாதம் சூடுபிடித்தது. அரச சேவை ஒன்றில் இருக்கும் ☞ 2

# வாய்ப்புக் கிடைத்தால் ஆட்சியை கவிழ்க்க எதிர்க் கட்சி காத்திருப்பு

## ரிவின் சில்வா தெரிவிப்பு

வாய்ப்பு கிடைத்தால் ஆட்சியைக் கவிழ்ப்பதற்குஎதிர்க்கட்சிகாத்திருக்கின்றது. மக்கள் எமக்கு 5 ஆண்டுகளுக்கான ஆணையை வழங்கியிருக்கின்றனர். எனவே ஆட்சிகவிழ்ப்பிற்கானசூழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டால் மக்கள் அதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டார்கள். ரணில், சஜித் இந்நாட்டின் ஜனாதிபதியாக வேண்டுமென நினைத்தால் அது அவர்களது நிறைவேறாத கனவாகும் என ஜேவிபியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்தார்.

வலல்லாவிட்ட பிரதேசத்தில் வெள்ளிக்கிழமை தேர்தல் கூட்டத்தில் உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாண்டு டிசம்பரில் சஜித் பிரேமதாச ஜனாதிபதியாவார் என கபீர் ஹசீம் கூறுகின்றார். இவ்வாண்டு தேர்தலொன்று இல்லாத நிலையில் அவர் எவ்வாறு இந்தக் கருத்தினை வெளியிட்டார்? வாய்ப்பொன்றுகிடைத்தால் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக இவர்கள் காத்துக் கொண்டிருக்கின்றனர். மக்கள் எமக்கு5ஆண்டுகளுக்கானஆணையை வழங்கியிருக்கின்றனர். அதில் இன்னும் ஒரு ஆண்டு கூட நிறைவடையவில்லை.

எதிர்வரும் 5 ஆண்டுகளுக்கு மாத்திரமின்றி, அதற்கு அடுத்த 5 ஆண்டுகளுக்கும் மக்கள் எமக்கு வாக்களிப்பர்என்றநம்பிக்கைஇருக்கிறது. எனவே ரணில், சஜித் இந்நாட்டின் ஜனாதிபதியாக வேண்டும் என்று எண்ணினால் அதுஅவர்களதுநிறைவேறாதகனவாகவே இருக்கும். கோட்டாபய ராஜபக்சநாட்டை விட்டு ஓடிய பின்னர் ரணில் ஜனாதிபதியானார். அவ்வாறானசம்பவம்மீண்டும் மீண்டும் இடம்பெறும் என்று இவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இது மிகவும் முட்டாள் தனமான எதிர்பார்ப்பாகும். இது முற்று முழுதாக மக்களின் ஆணையையும் நம்பிக்கையையும் பெற்ற ஆட்சியாகும். எனவே எவருக்கும் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு மக்கள் இடமளிக்கப் போவதில்லை என்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது.

மே 6 தேர்தலின் பின்னர் நாம் அதனைஉறுதிப்படுத்திக்காண்பிப்போம். நாம் இந்த நாட்டில் மாற்றமொன்றை ஏற்படுத்தியிருக்கின்றோம்.தற்போது ☞ 2

# மின்வேலியில் சிக்கி முதியவர் உயிரிழப்பு

## கந்தபளையில் பரிதாபம்

நுவரெலியா கந்தபளை புதிய வீதி பகுதியில் மரக்கறி தோட்டத்தில் மின்சார வேலியில் சிக்கி முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

கந்தபளை புதிய வீதி பகுதியைச் சேர்ந்த 74 வயதுடைய முதியவரே உயிரிழந்தார்.

காட்டு விலங்குகளிடமிருந்து பாதுகாப்பதற்காக மரக்கறி தோட்டத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கியே முதியவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தன்று முதியவர் வழமைபோன்று தனது வீட்டிலிருந்து தோட்டத்திற்குச் சென்றுள்ளார். அங்கிருந்த அவர் வீடு திரும்பாததால் அவரது உறவினர்கள் அவரைத் தேடத் தொடங்கினர். பின்னர் அவரது சடலத்தைத் ☞ 8

# கட்டுநாயக்காவில் இளைஞன் மீது சூடு

கட்டுநாயக்க, ஹீனடியன பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், நேற்றுக் காலை 5.35 மணியளவில் அவரது வீட்டிற்கு வந்த இரண்டு மர்ம நபர்களால் ரி- 56 துப்பாக்கியால் இரண்டு முறை சுடப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சுடப்பட்ட இளைஞர் வட்டிக்குப் பணம் கொடுப்பதுடன் பல தொழில்களையும் நடத்தி வருகிறார். தனது வீட்டில் ஓர் அறையில் தூங்கிக் கொண்டிருந்தபோது, மே ☞ 2

# விடுவிக்கப்படக்கூடிய காணிகள் அனைத்தையும் விடுவிப்பேன்

## புதுக்குடியிருப்பில் சுருதி மாறிய ஜனாதிபதி

போர் மற்றும் பாதுகாப்புக் காரணிகளைக் குறிப்பிட்டு மக்களின் காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. விடுவிக்கக் கூடிய அனைத்துக் காணிகளையும் விடுவிப்பேன். அவரவர் காணிகள் அவரவருக்கு வழங்கப்படும். விசேட கருத்திட்டத்தின் ஊடாக வடக்கு மாகாணத்தில் காணப்படும் வீட்டு பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக்கொடுப்போம். இடைநிறுத்தத்தப்பட்ட அபிவிருத்தி பணிகளைமீளஆரம்பிப்போம்.முல்லைத்தீவு வட்டுவாக்கல்பாலம்நிர்மாணிப்புபணிகளை அடுத்த மாதம் தொடங்கும் எனவும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

புதுக்குடியிருப்பில் நேற்று நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் கூட்டத்தில் உரையாற்றியபோது இதனைத்தெரிவித்தார்.

2024 ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னரும் படையினரால் கையகப்படுத்தப்பட்ட அனைத்துக் காணிகளையும் விடுவிப்பேன், மக்களின் காணிகள் மக்களுக்கே என்று வாக்குறுதியளித்திருந்தார் ஜனாதிபதி. ஆனால் நேற்று உரையாற்றும்போது விடுவிக்கப்படக்கூடிய காணிகள் அனைத்தையும் விடுவிப்பேன் என்றார். ☞ 2

# மின்னல் தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு

அரலகங்வில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெகுளுவெலபகுதியில்நெல்வயலில்வேலை செய்து கொண்டிருந்தபோது மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த விவசாயி, அரலகங்வில மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னரே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இறந்தவர் அரலகங்வில, கெகுளுவெல பகுதியைச் சேர்ந்த 63 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம்நடந்தநேரத்தில்பாதிக்கப்பட்டவர் மற்றொருநபருடன் இணைந்து பணியாற்றி வந்தார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இரண்டாவது நபரும் ☞ 2

# அமைச்சர் பிமலின் கூட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்த நபர் கைது

## யாழ். கொட்டடியில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணத்தில் அமைச்சர் பிமல் ரத்நாயக்கா கலந்துகொண்ட தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் கூட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து அதனை நிறுத்தி விட்டு வெளியேறுமாறு கோரிய நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். கூட்டத்தில் குழப்பம் விளைவித்தார் என்று செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டார்.

யாழ். நகரை அண்டிய, கொட்டடி பகுதியில் நேற்றிரவு தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அந்தப் பகுதியைச் சேர்ந்தஒருவருக்குதேசிய மக்கள் சக்தியினர் அங்கு கூட்டம்நடத்துவது ☞ 2

# ரூ. 800 மில்லியன் மதிப்பான ஹெரோயின், ஐஸ் மாட்டின

வீடு ஒன்றினுள் இருந்து 800 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப் பொருட்களைக்கைப்பற்றியுள்ளதாகப் பொலிஸார் அறிவித்துள்ளனர். கொட்டிகாவத்தை, நாகஹமுல்லவில் உள்ள ஒரு வீட்டில் நடத்தப்பட்ட சோதனையின் போது, இவை சிக்கியுள்ளன.

இ13கிலோ 372கிராம்ஹெராயின் மற்றும் 3 கிலோ 580 கிராம் ஐஸ் (கிரிஸ்டல் மெத்தம்பேட்டமைன்) ஆகியவைமீட்கப்பட்டதாகபொலிஸார் தெரிவித்தனர்.கைப்பற்றப்பட்ட ☞ 2

# 15 நாள்களில் தென்னக்கோனிடம் மூவர் குழு விசாரணை நடத்தும்

பணி இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் அதிகார துஸ்பிரயோகம் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் மூன்று பேர் கொண்ட குழு, அடுத்த பதினைந்து நாட்களில் தென்னகோனிடம் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு முதலில் ☞ 2

# வருடாந்தம் 7,500 ஆசிரியர்கள் ஓய்வு: 4000 பேரே ஆட்சேர்ப்பு

## விரைவில் சரிசெய்யப்படும் என்கிறார் பிரதமர்

நாட்டில் நீண்ட காலமாக நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கும் என்று அமைச்சர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பிலியந்தலையில் நேற்று நடந்த தேர்தல் கூட்டத்தில் பேசிய அவர், ஒவ்வொரு ஆண்டும் சுமார் 7,500 ஆசிரியர்கள் ஓய்வு பெறுகின்றனர் எனவும், சுமார் 4,000 புதிய ஆசிரியர்கள் மட்டுமே ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்றனர் என்றும், இதன் விளைவாக ஆண்டுதோறும் கிட்டத்தட்ட 3,000 வெற்றிடங்கள் ஏற்படுகின்றன என்றும் குறிப்பிட்டார்.

இந்த இடைவெளி இருந்தபோதிலும், பல ஆண்டுகளாக சவாலான சூழ்நிலைகளில் பாடசாலைக் கல்வி தொடர்கிறது என்றும் அவர் மேலும் கூறினார்.

நிலைமையை முன்னோக்கிச் ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

ஓய்வுபெறும் வயதை நெருங்கிய நபர் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் மற்றும் அமைப்பாளரைப் பார்த்து உரத்த குரலில் அரசியல் வகுப்பெடுத்துக்கொண்டிருந்தார். எனக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. பேசிய முதியவரும் வேட்பாளரும் நண்பர்கள்தான். இருந்தாலும் அவர் வேட்பாளர் என்பது முதியவருக்குத் தெரியாமல் இருக்குமோ இப்படிப் போட்டுப் பிளக்கிறாரே என்று மெல்ல முதியவரை நெருங்கி, அவர் இப்போது யார் என்று தெரியுமோ என்று மெல்ல விசாரித்தேன். "ஓம் ஓம்! அவர் தான் தேர்தல்ல போட்டியிடுகிறன் அதுவும் தேசிய மக்கள் சக்தியில் போட்டியிடுகிறன் என்று சொன்னத்துக்குப் பிறகுதான் நான் கதைக்கத் தொடங்கின்னான்" என்றார் பெரிய சிரிப்புடன். ''அப்படியென்றால் இன்னும் நன்றாகப் பேசுங்கோ'' என்று தட்டிக் கொடுத்துவிட்டு வந்துவிட்டேன்.

தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில் புனைவில்வந்திருக்கும்ஜேவிபிதமிழர்களுக்கு எதிராகச் செய்தவை பற்றியெல்லாம் எடுத்து விலாவரியாகச் சொன்ன முதியவர், அப்படிப்பட்டவர்களுக்கு வாக்களிக்கலாமா என்று வேட்பாளரினதும் அமைப்பாளரினதும் முகத்துக்கு நேராகவே கேட்டார். அவர்கள் இளைஞர்கள், என்ன பதில் சொல்வது அவரை எப்படிக் கட்டுப்படுத்துவது என்று தெரியாமல் திணறிக்கொண்டிருந்தனர். என்ன இருந்தாலும் உள்ளூராட்சித் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு ஒருத்தரும் வாக்களிக்கக்கூடாது என்று அந்தப் பெரியவர் ஒரே போடாகப் போட்டார். ''உள்ளாட்சி சபைகளையும் அவங்களிட்ட தூக்கிக் குடுத்துவிட்டா, பிறகு தமிழர்கள் தங்கட பிரச்சினைக்கு உரிமைக்கு என்று போய் அவங்களிட்ட ஏதாவது கதைக்க ஏலுமே, கேக்க ஏலுமே" என்றார் நெத்தியடியாக.

அந்தச் சிறுவர்களோ, "ஜேவிபி இனவாதிகளா இருந்திருந்தாலும் கடந்த 6 மாதங்களில அவங்கள் இனவாதமா ஏதாவது கதைச்சவையோ'' என்று இழுத்துக் கொண்டிருந்தார்கள். பெரியவரோ அவர்களைப் போட்டு வாங்குவதில் குறியாக இருந்தார். எனக்குஅப்போதுதான் ஒன்று மிகத்தெளிவாகத் தெரிந்தது. தலைவர்கள் சிந்திக்கிறார்களோ இல்லையோ, செயற்படுகிறார்களோ இல்லையோ மக்கள் தெளிவாகவே இருக்கிறார்கள். உரிமையும் உணர்வும்தான் முக்கியம் என்கிற மக்கள் எப்போதும் அதற்காக விட்டுக்கொடுக்க முடியாத அர்ப்பணிப்போடுதயாராகவே இருக்கிறார்கள். சலுகைகளும் சுயநலமும்தான் முக்கியம் என்று கருதுகின்றவர்கள் தமது நலன்களைத் தேடிப் பின்சென்றுகொண்டேதான் இருக்கிறார்கள். இதில் சில ஏற்ற இறக்கங்கள் அவ்வப்போது வரலாமே தவிர, மாறாது. உண்மையான உணர்வான தமிழர்கள் இன்னும் நிறையப் பேர் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அந்தப் பெரியவர் தமிழ்த் தலைவர்களால் ஆர்க்கஷிக்கப்பட்டவராகவோ எந்தவொரு தமிழ்க் கட்சியின் ஆதரவாளராகவோ இருக்கவில்லை. ஊடகங்கச் செய்திகளின் பாதிப்புக்கு உட்பட்டவராகவும் அவர் இல்லை. பணி இடத்தில் கிடைத்தால் பத்திரிகை பார்ப்பார் என்பதற்கு அப்பால் ஊடகச் செல்வாக்குக்கும் உட்படாத நபர். அவர் தனது வாழ்க்கையிலிருந்து பேசினார். தனது அனுபவத்திலிருந்து பேசினார். எதிராளிகளால் பதில் சொல்ல முடியாவில்லை. அவரைப் போன்றவர்களால்தான் இன்னமும் வாழ்கிறது தமிழ்த் தேசியம். இந்தத் தேர்தல் அந்த உண்மையை உரத்துச் சொல்லும் என்கிற நம்பிக்கை அவரைப் பார்த்த பின்னர் எனக்கு வந்தது. நன்றாக வாழட்டும் அந்த மனிதர்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## விடுவிக்கப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு மாவட்டம் கேப்பாப்புலவு கிராமத்தில் இலங்கை வான் படையினர் மக்களின் காணிகளை ஆக்கிரமித்து முகாம் அமைத்துள்ளனர். அதனை அகற்றித் தமது காணிகளைத் தமக்குத் தருமாறு மக்கள் தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்தி வருகின்றனர். அண்மையில் தமது கோரிக்கை அடங்கிய கடிதம் ஒன்றை ஜனாதிபதி செயலகத்திற்கு மாவட்டச் செயலர் மூலம் அனுப்பி வைத்தனர்.

கேப்பாபுலவு மக்களின் கோரிக்கை தமக்குக்கிடைக்கவில்லைஎன்று அந்த மக்களிடம் ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்ததை அடுத்தே மக்கள் மாவட்டச் செயலரிடம் தமது கோரிக்கையை மீண்டும் கையளித்தனர். ஆனால், மக்களின் முன்னைய கோரிக்கைக் கடிதங்கள் மற்றும் மனுக்கள் தம்மால் உரிய வகையில் ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதாக மாவட்டச் செயலர் மக்களிடம் உறுதிப்படுத்தினார். அந்த மனுக்கள் கடிதங்கள் மாவட்டச் செயலகத்திலிருந்து தமக்குக் கிடைத்ததை சான்றுப்படுத்திஜனாதிபதிசெயலகம்வழங்கிய தகவல் அறிக்கையையும் அவர் மக்களிடம் காண்பித்தார்.

இந்தநிலையில்கேப்பாப்புலவுகாணிகளின் விடுவிப்புக் குறித்தோ அல்லது அந்தக் காணிகள் எப்போது விடுவிக்கப்படும் என்பது குறித்தோ ஜனாதிபதி வாய் திறக்கவில்லை.

ஜனாதிபதி தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

எனது அரசியல் பயணத்தில் நேற்றுத் தான் முதன்முறையாக புதுக்குடியிருப்புப் பகுதியில் தேர்தல் கூட்டத்தில் கலந்துகொண்டுள்ளேனன். அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வடக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் தேசிய மக்கள் சக்தி மீது நம்பிக்கை கொண்டு வாக்களித்துள்ளார்கள். அதற்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றசபைத் தேர்தலில் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிப்பார்கள். பழைய அரசியல்வாதிகள் தமிழ் - சிங்கள மக்களைப் பிரித்தார்கள்.

வடக்கு மக்கள் வடக்கு தமிழ் அரசியல் தலைவர்களைத் தெரிவு செய்தார்கள். தெற்கு மக்கள் சிங்கள அரசியல் தலைவர்களை தெரிவு செய்தார்கள். கிழக்கு மாகாண மக்கள் முஸ்லிம் அரசியல் தலைவர்களைத் தெரிவு செய்தார்கள்.

இருப்பினும்இம்முறைநடைபெற்றஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத்தேர்தலிலும் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் தேசிய மக்கள் சக்தியை தெரிவு செய்தார்கள்.

ஒன்றிணைந்து செயற்பட்டால் மாத்திரமே எதிர்காலத்தை கட்டியெழுப்ப முடியும். தேசிய மக்கள் சக்தி அனைத்து இன மக்களும் கௌரவமாகவும் அவரவரின் உரிமைகளுடன் வாழும் சூழலை ஏற்படுத்தியுள்ளது.

மொழி, கலாசாரம் என்ற அடிப்படையில் எவரையும் வேறுப்படுத்தப் போவதில்லை. இந்த நாட்டில் தமிழர்கள், சிங்களவர்கள் மற்றும் முஸ்லிம்கள் சமவுரிமையுடன் வாழ்வதற்கு உரிமையுண்டு.

இந்த நாட்டில் பொதுவான பிரச்சினைகள் காணப்படுகின்ற நிலையில் வடக்கு மக்களுக்கு பிரத்தியேகமான பல பிரச்சினைகள் காணப்படுகின்றன.

30 ஆண்டுகாலப் போரால் இந்த மாகாணத்தின் அபிவிருத்தி பின்னடைந்தது. போரால் பல பிரச்சினைகள் தோற்றம் பெற்றன. போர் முடிவடைந்து பல ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை.

போரால் தோற்றம் பெற்ற பிரச்சினைகளுக்கு முழுமையான தீர்வினைப் பெற்றுக்கொடுப்போம். போர் மற்றும் பாதுகாப்பு காரணிகளைக் குறிப்பிட்டுக்கொண்டு மக்களின் காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

விடுவிக்கப்படக்கூடிய அனைத்துக் காணிகளையும் விடுவிப்பேன். அவரவர் காணிகள் அவரவருக்கு வழங்கப்படும். விசேட கருத்திட்டத்தின் ஊடாக வடக்கு மாகாணத்தில் காணப்படும் வீட்டுப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுப்போம்.

இடைநிறுத்தத்தப்பட்ட அபிவிருத்திப் பணிகளை மீள ஆரம்பிப்போம். முல்லைத்தீவு வட்டுவாக்கல் பாலம் நிர்மாணிப்புப் பணிகளை அடுத்த மாதம் தொடங்குவோம்.

அதற்கு 1000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோல் கொக்கிளாய் பாலத்தை நிர்மாணிப்போம். பாலம் அபிவிருத்தி செய்யப்பட்டால் முல்லைத்தீவு திருகோணமலை போக்குவரத்து சேவை இலகுப்படுத்தப்படும். அதற்கு அடுத்த ஆண்டு மானியம் ஒதுக்கப்படும்.

அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். கொக்கிளாய் மற்றும் சாலை பாலம் அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கப்படும்.

இந்த மாகாணத்தை நாங்கள் அபிவிருத்தியால் கட்டியெழுப்புவோம். வடக்கு மாகாண வீதி அபிவிருத்திக்கு 5000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் 1000 மில்லியன் ரூபா முல்லைத்தீவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஏழ்மை ஒழிக்கப்படும். விவசாயத்துறையை மேம்படுத்த உரிய திட்டங்கள் அமுல்படுத்தப்படும்.

விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட தயாராயின் அதற்கான காணிகள் வழங்கப்படும். வடக்கு மாகாணத்தை சகல துறைகளிலும் அபிவிருத்தி செய்வோம் - என்றார்.

## வாய்ப்புக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சிகள் சொல்வதைப்போன்று நாம் ஒருபோதும் பொய் கூறவில்லை.

1970களில் ஐக்கிய தேசிய கட்சியே பொய் கூறி ஆட்சியைக் கைப்பற்றியது. எமக்கு ஆட்சியை வழங்கினால் நாட்டில் வன்முறை வெடிக்கும் எனக் கூறினர். அவர்கள் கூறியதைப் போன்று எதுவும் இடம்பெறவில்லையல்லவா? ஊழல் மோசடியற்ற நாட்டை உருவாக்குவோம் என உறுதியளித்திருந்தோம்.

அதனைச் செயலில் நிரூபித்துக் காண்பித்துள்ளோம். எனினும் தற்போது கிராமிய மட்டத்தில் சிறு ஊழல், மோசடிகள் இடம்பெற்று வருகின்றன. மே 6 தேர்தலின் பின்னர் அவற்றுக்கும் முற்றுப்புள்ளி வைப்போம் என்றார்.

## அமைச்சர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிடிக்காத காரணத்தால் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். கூட்டத்த நிறுத்திவிட்டு தேசிய மக்கள் சக்தியினர் வெளியேறவேண்டும் என்று அவர் கூச்சலிட்டார்,

கூட்டத்தில் குழப்பத்தை ஏற்படுத்த முனைந்தார் எனும் குற்றச்சாட்டில் அவரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்தனர். யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் நேற்றிரவு அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

## 15 நாள்களில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தென்னகோனிடம் குற்றப்பத்திரிகையை ஒப்படைக்கும். மேலதிகமாக பொலிஸ் உயரதிகாரிகள் உட்பட அரசு அதிகாரிகள், மாத்தறை வெலிகம ஹோட்டலில் சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் ஆகியோரையும் அழைத்து விசாரணை நடத்தும். அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிக்க அவர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படும்.

தேசபந்து தென்னகோனுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் மூன்று பேர் கொண்ட குழுவை சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன சமீபத்தில் நியமித்தார்.

உச்ச நீதிமன்ற நீதிபதி பிரீத்தி பத்மன் சூரசேன தலைமையிலான இந்தக் குழுவின் மற்ற உறுப்பினர்களாக லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையத்தின் தலைவர், முன்னாள் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி நீல் இத்தவாலா மற்றும் தேசிய காவல் ஆணையத்தின் தலைவர் லலித் ஏகநாயக்க ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்தக் குழு தனது விசாரணைகள் குறித்த முதற்கட்ட விவாதங்களை நாடாளுமன்ற வளாகத்தில் ஏப்ரல் 23, 25 ஆகிய தினங்களில் நடத்தியது. தேசபந்து தென்னகோனுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விசாரிக்க மூன்று பேர் கொண்ட குழுவை நியமிக்கும் திட்டம் 8 ஆம் தேதி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்தக் குழு தனது விசாரணையை முடித்த பின்னர் சபாநாயகரிடம் தனது இறுதி அறிக்கையை சமர்ப்பிக்கும். குழு அறிக்கை அடுத்த மாத இறுதிக்குள் சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்படும் என்று நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

தேசபந்து தென்னகோனை பொலிஸ் மா அதிபர் பதவியில் இருந்து நீக்குவதற்கான திட்டம் அதன் பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

## மின்னல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்து சிகிச்சைக்காக அரலகங்வில மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## வருடாந்தம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சரிசெய்வதற்கான திட்டங்கள் நடைபெற்று வருவதாக பிரதமர் உறுதியளித்தார்.

## கட்டுநாயக்காவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ாட்டார் சைக்கிளில் வந்த இரண்டு மர்ம நபர்கள் அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த இளைஞர் சிகிச்சைக்காக மினுவாங்கொட ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக மருத்துவ சிகிச்சைக்காக கம்பஹா மாவட்ட பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

## ரூ. 800 மில்லியன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் போதைப் பொருள்கள் தொடர்பாக 27 வயதான சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். தற்போது மேலும் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

வெல்லம்பிட்டி காவல் பிரிவின், கொட்டிகாவத்தை, நாகஹமுல்லவில் உள்ள ஒரு வீடு போதைப்பொருள் விநியோக மையமாக இயங்கி வருவதாக மாலபே காவல் நிலையத்துக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், பொறுப்பதிகாரி, இன்ஸ்பெக்டர் பிரசாத் ரத்நாயக்க, ஊழல் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி, சப்-இன்ஸ்பெக்டர் கவிந்து பிரபாஸ்வர ஆகியோர் அடங்கிய குழு இந்தச் சோதனையை மேற்கொண்டது.

வீட்டிலிருந்த நபர் கைது செய்யப்பட்டு, வீடு சோதனையிடப்பட்டது. அறையில் ஒரு சூட்கேஸில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டது.

ஹெராயின் 13 பார்சல்களாகவும், ஐஸ் 2 பார்சல்களாகவும் இருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் மஹரபகுதியைச்சேர்ந்த மோரின் என்ற போதைப்பொருள் கடத்தல்காரரின் பெயரைக் குறிப்பிட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் மூலமாக நமது மக்கள் தமிழ் அரசுக் கட்சிக்கு ஒரு பாடம் படிப்பிக்கவேண்டும்

## கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

(சக்திவேல்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் மூலம் நமது மக்கள் தமிழரசுக் கட்சிக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும். எமது கட்சிக்குள் இருக்கின்ற உறுப்பினர்களைப் பலப்படுத்த வேண்டும். அவர்களின் அந்த தலைமைத்துவம் இருக்கின்ற வரைக்கும் தமிழ் மக்கள் அவர்களை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்ற ஒரு நிலைமையை உருவாக்க வேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுபற்று வேட்பாளர் அறிமுக நிகழ்வு மண்டூர் தம்பலவத்தை கிராமத்தில் புதன்கிழமை மாலை நடைபெற்றது.

இதன்போது கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் தமிழரசு கட்சியை முற்று முழுதாக அழிக்க வேண்டும் அரசியல் அரங்கில் இருந்து அவர்களை நீக்க வேண்டும் என்ற அடிப்படையிலே இயங்குகின்ற ஓர் அமைப்பு அல்ல. எம்மைப் பொறுத்தவரை நாங்கள் தமிழரசுக் கட்சிக்கு எதிராக செயற்பட வேண்டி இருக்கின்றதாக இருந்தால் அதற்குக் காரணம் தமிழரசுக் கட்சியை தற்போது தலைமை வகிக்கின்றவர்கள் முற்று முழுதாக எந்தக் கொள்கைக்காக தந்தை செல்வநாயகம் அவர்களுடைய காலத்திலே கட்சி அக்கட்சி ஸ்தாபிக்கப்பட்டதோ அந்தக் கொள்கைக்கு நேர் மாறாக அந்த கட்சியை வழி நடத்திக் கொண்டு செல்வதுதான் காரணமாகும்.

தமிழ் தேசியத்திலேயே இயங்கக்கூடிய கட்சிகளுக்கு கடந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் ஒரு சவாலை ஏற்படுத்தி இருக்கின்றன. தற்போது ஆட்சியில் இருக்கின்ற தேசிய மக்கள் சக்தி அதுபோல் ஜே.வி.பி. தமக்குத்தான் தமிழ்த் தேசிய மக்கள் ஆணை வழங்கியிருப்பதாக சர்வதேச மட்டத்திலே பெரியதொரு கருத்துருவாக்கத்தினை செய்து வருகின்றது. கடந்த தேர்தலிலே மட்டக்களப்பு மாவட்டம் தவிர அனைத்து மாவட்டங்களிலும் அவர்களுடைய கட்சி அதிக அளவு வாக்குகளை பெற்றதாக கூறி தமிழ் மக்கள் அவர்களுக்குத்தான் ஓர் ஆணை வழங்கியிருப்பதாக ஒரு கருத்து உருவாக்கத்தை செய்து கொண்டு வருகின்றார்கள்.

இந்நிலையில் நாங்கள் சந்திக்கின்ற வெளிநாட்டுத் தூதுவராலயங்கள் இந்த கருத்துருவாக்கத்தை எம்மிடம் தெரிவித்து வருகின்றார்கள் அதனை நாங்கள் மறுதலித்தும் வருகின்றோம்.

ஜே.வி.பி. கிழக்கு மாகாணத்திலேயே வாக்குகளை பெற்றிருக்கின்றார்கள் என்றால் அது அங்கிருக்கின்ற சிங்கள மக்களின் வாக்குகளாலேதான் பெற்றிருக்கின்றார்கள். தமிழ் மக்களின் பெரும்பான்மையான வாக்குகளால் அல்ல.

அதுபோல் வடக்கிலே யாழ். மாவட்டத்திலே மாத்திரம்தான் ஜே.வி.பிக்கு பெரியதொரு வாக்கு இருப்பதாக காட்டிக் கொள்கின்றார்கள். ஆனாலும் யாழ்.மாவட்டத்திலேயே மூன்று ஆசனங்களை அவர்கள் பெற்றிருந்தாலும் வெறுமனே 24 விதமான வாக்குகள்தான் அவர்கள் பெற்றிருக்கின்றார்கள். மீதமான 76 விதமான வாக்குகள் அவர்களுக்கு எதிரான வாக்குகளாகவேதான் விழுந்திருக்கின்றன. வடக்கிலே அங்கு ராமநாதன் மற்றும் டக்லஸ் தேவானந்தா ஆகியோரின் வாக்குகள் பிரிந்ததாலேதான் அவர்களுக்கு வாக்கு கிடைத்து. இரண்டு ஆசனங்களும் மேலதிகமான ஓர் ஆசனமும் மூன்று ஆசனங்கள் கிடைத்திருக்கின்றன. மாறாக மக்களுடைய ஆணை அவர்களுக்கு பெருவாரியாக கிடைத்தது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.



முதல் தடவையாக வாக்களிக்கின்ற இளைஞர்கள் ஜே.வி.பிக்கு வாக்களித்திருக்கலாம். ஆனால் ஒட்டுமொத்ததமிழ்மக்கள் ஜே.விபியைப் புறக்கணித்துதான் இருக்கின்றார்கள். ஏன் புறக்கணித்தார்கள் என்றால் ஜே.வி.பி ஓர் இனவாதக் கட்சி. சமாதான முயற்சிகளை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தால் முன்னெடுத்துக் கொண்டிருந்த காலகட்டத்திலே அந்த முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும் இராணுவத்தின் ஊடாக போர் வியூகத்தின் ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே மிகத் தீவிரமா இலங்கையிலே பிரசாரத்தை மேற்கொண்டு சிங்கள மக்களை முழுமையான போருக்கு உரிய மனோநிலையை தயார் படுத்தியது இந்த ஜே.வி.பி.

ராஜபக்ஸ வெறுமனே இனவாதத்தை கக்கி கொண்டிருந்தாரே தவிர தத்துவார்த்த ரீதியான அந்த மக்களின் முழுமையான போருக்கு கண்மூடித்தனமான போருக்கு முழுமையாக சிங்கள மக்களை தயார்படுத்தியது இந்த ஜே.வி.பி. தான் மக்களுக்கு இந்த ஜேவிபி யை பற்றி மிகவும் நன்றாகத் தெரியும். தற்போது தீர்வை கொடுக்க போவதாக அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள்.

அந்தத் தீர்வு ஒருநாளும் எமக்கு சாதகமாக அமையாது என்பதையும் எமது மக்கள் உணர்வுரீதியாக தெரிந்து வைத்துள்ளார்கள். ஜே.வி.பி. ஒருநாளும் எமக்குரிய தீர்வினை தராது. ஏனெனில் இணைந்த வடக்குக் கிழக்கு, தமிழ் தாயக கோட்பாட்டை முடிவுக்கு கொண்டு வந்தது இந்த ஜே.வி.பி. தான் இணைந்த வடக்கு கிழக்கை பிரித்ததுதான் இந்த ஜேவிபி இவ்வாறு முற்றுப்புள்ளி வைத்த ஜே.வி.பி ஒருநாளும் அவர்கள் ஊடாக எனக்கு தீர்வு கிடைக்காது என்பது எனது மக்கள் நன்றாக அறிவார்கள்.

எம்மைப் பொறுத்த அளவில் ஜேவிபி பயந்து பெரிய அளவில் முகம் கொடுக்க வேண்டும் என இந்தத் தேர்தல் எமக்கு கிடையாது. அவர்களுக்கு அவ்வாறு வாக்குகள் விழப்போவதுமில்லை. ஆனால் தமிழ் தேசிய நிலைப்பாட்டுக்கு சரியான கோணத்திலேயே வாக்குகள் விழ வேண்டும் என்பது எமது அத்தியாவசியமாகும். தேர்தல் முடிவுகளை கணிப்பதற்கு நாங்கள் ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். உள்ளூராட்சி தேர்தல் நிலைப்பாடு தெளிவான தமிழ் தேசியத்தை நிலை நிறுத்த வேண்டியகட்டாய தேவைநம்மிடத்தில்இருக்கின்றது. அதில்தான் நமது முக்கியத்துவம் வருகின்றது.

ஜேவிபி ஒற்றையாட்சி முறை ஒன்றை கொண்டு வந்து நிறைவேற்றப் போவதாக ஜனாதிபதி அனுரகுமார திஸநாயக்கா பல தடவைகள் கூறியுள்ளார். அந்த ஒற்றை ஆட்சி அமைக்கும் முறை என்ன என்பதையும் தெளிவாக சொல்லி உள்ளார். 2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரைக்கும் இருந்த ஆட்சிக் காலத்திலேயே ஒரு புதிய அரசமைப்புக்கான யோசனைகள் முன்வைப்பட்டன. அந்த இடைக்கால் அறிக்கையை அனைவருக்கும் தெரிந்திருக்க வேண்டிய விடயமாகும்.

76 வருட காலமாக எமது இனப் பிரச்சினைக்கு மூல காரணமாக இருப்பது அந்த ஒற்றை ஆட்சி பௌத்தர்களுடைய கையிலேதான் அந்த ஆட்சியை வழங்க வேண்டும். ஆகவே அந்த ஒற்றை ஆட்சி முறையும்இலங்கைதீவில்தமிழர்களுக்குபொருந்தாது என எமது மூத்த தலைவர்கள் முடிவெடுத்து இந்த இலங்கை தீவிலே தமிழ் மக்கள் சுதந்திரமாக சம உரிமையோடு பாதுகாப்பாக தங்களுடைய மக்களையும் தக்க வைத்துக்கொண்டு வாழ்வதாக இருந்தால் ஒற்றை ஆட்சியை நிராகரித்து ஒரு சமஸ்டி ஆட்சி ஊடாகத்தான் தான் நாம் அதனை உறுதி செய்யலாம் என்பதை எனது அடிப்படை கொள்கையாக இருக்கின்றது.

ஏக்கிய ராஜ்ஜிய அரசமைப்பை ஸ்தாவிப்பதற்கு தமிழரசுக் கட்சியின் தற்போதைய செயலாளருக்கு மிகப்பெரிய பங்கு உள்ளது. சம்பந்தன் ஐயா அவர்களுக்கும் பெரிய பங்கு உள்ளது. அவர்கள் இருவரும்தான் முக்கியமாக அந்த பேச்சில் ஈடுபட்டு அரசமைப்பை தயார்படுத்துவதற்கு வேலைத்திட்டத்தை தயார் படுத்துவதற்கு தமிழர்கள் சார்பாக அதில் இருந்து வந்தார்கள். தற்போது சம்பந்தர் ஐயா தற்போது இல்லை. ஆனால் சுமந்திரன் இருக்கிறார். அது மாத்திரம் இன்றி சுமந்திரன் யாழ்ப்பாணத்தில் செய்த துரோகத்திற்காக யாழ்ப்பாண மக்கள் அவரை தூக்கி எறிந்தாலும்கூட எமது இனத்தின் கஷ்ட காலத்திற்கு அவர் தமிழரசு கட்சிக்கு ஓர் அசைக்க முடியாத ஒருவராக வைத்திருக்கின்றார்.

தமிழ் மக்கள் அவரை தோற்கடித்தாலும் தமிழரசு கட்சி தமிழருடைய பாரம்பரிய கட்சி என்ற நினைப்பிலேயே மக்கள் தமிழரசு கட்சிக்கு வாக்களித்தாலே 8 ஆசனங்களை பெற்ற உடனேயே அதே சுமந்திரன் தமிழரசுக்கட்சிக்கு கிடைத்த ஆணையை வைத்து தற்போது அந்த முழு கட்சியையும் தான் மீண்டும் தனது பிடிக்குள் எடுத்து ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றார்.

எனவே இந்தத் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் மூலம் நமது மக்கள் தமிழரசுக் கட்சிக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும். எமது கட்சிக்குள் இருக்கின்ற உறுப்பினர்களை பலப்படுத்த வேண்டும். அவர்களின் அந்த தலைமைத்துவம் இருக்கின்ற வரைக்கும் தமிழ் மக்கள் அவர்களை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்ற ஒரு நிலைமையை உருவாக்க வேண்டும். அவ்வாறு நினைத்தால் அந்த தலைமைத்துவத்தை திருத்தலாம். அல்லது தூக்கி எறிந்து தமிழரசுக் கட்சி தனது ஆரம்பக் கொள்கைக்கு விசுவாசமாக பயணிக்க கூடிய ஒரு புது தலைமைத்துவத்தை ஏற்படுத்தும் அந்த நாள் வருகின்ற பொழுது இந்த தமிழ் தேசிய பேரவை தமிழரசு கட்சியோடு பேச்சுகளை வெற்றிகரமாக நடத்தும் என்ற நம்பிக்கையை நான் இன்று தெரிவித்துக் கொள்கின்றேன். அந்த நிலைமை உருவாகின்ற வரைக்கும் தமிழரசுக் கட்சியோடு பேசுவது எந்தக் காரணத்திலும் வெற்றி கொடுக்கப் போவதில்லை என்பதையும் நான் பொறுப்போடு தெரிவிக்கின்றேன். - என அவர் இதன்போது தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கவலையை ஏற்படுத்தும் புதிய அலை

**இலங்கையில் அண்மைக் காலமாக ஹெரோயின், ஐஸ் மற்றும் குஷ் போன்ற ஆபத்தான போதைப் பொருள்களின் கைப்பற்றல்கள் அதிகரித்து வருகின்றன. அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்களின்படி, கடந்த மூன்று மாதங்களில் மட்டும் 500 கிலோ கிராம் ஹெரோயின், 200 கிலோ கிராம் ஐஸ், 150 கிலோ கிராம் குஷ் ஆகியன நாட்டின் பல்வேறு இடங்களில் பாதுகாப்புப் படையினராலும், காவல்துறையினராலும் கைப்பற்றப்பட்டுள்ளன. இது நாட்டின் எதிர்காலத்திற்கே நேரடியான அச்சுறுத்தலாக மாறியுள்ளது.**

**பொதுவாக ஹெரோயின் கடந்த இரண்டு தசாப்தங்களாகவே இலங்கையில் ஒரு பெரிய சவாலாக இருந்து வருகிறது. ஆனால், தற்போதைய பரிணாமம் அதைவிட மோசமானது. ஐஸ் (Ice) எனப்படும் மெத்தாம்பெட்டமின் போதைப்பொருள், இளைய சமுதாயத்தை ஆழமாகத் தாக்கி வருகிறது. குஷ் (Kush) எனப்படும் மேம்படுத்தப்பட்ட கஞ்சா வகையும் தற்போது பாடசாலை மாணவர்களிடம் கூட பரவத் தொடங்கியுள்ளதாக பல இடங்களில் அறிக்கைகள் வெளியாகின்றன.**

**இந்த போதைப்பொருள்கள் நாட்டிற்கு சட்டவிரோதமாகபல்வேறுவழிகளில்கொண்டுவரப்படுகின்றன. கடல் வழி, நில வழி மற்றும் தற்போது விமானபோக்குவரத்துகூடபயன்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதில் சில அதிகாரிகள் ஈடுபடுகிறார்களா என்பதற்கான சந்தேகங்களும் எழுகின்றன.**

**போதைப்பொருள்தடுப்புபிரிவுகள்முன்னெடுக்கும் நடவடிக்கைகள் பாராட்டத்தக்கவையாக இருந்தாலும், நிலவரத்தின்தீவிரம்மிகஅதிகமுள்ளதாகவே தெரிகிறது. இளம் தலைமுறையின் அழிவைத் தடுக்க, அதிக கட்டுப்பாடுகள் மற்றும் புதிய, நவீன முறைமைகளில் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம்.**

**சமூக விழிப்புணர்வு நிகழ்வுகள், பாடசாலை மட்டத்திலேயேபோதைப்பொருள்களின்ஆபத்தைப் புரியவைக்கும் வகையில் கல்வி திட்டங்கள், கடுமையான சட்ட நடவடிக்கைகள் ஆகியவை ஒரு சேர முன்னெடுக்கப்பட வேண்டிய கட்டாய நிலை உருவாகியுள்ளது. நாட்டின் பாதுகாப்பிற்கும், சமூகத்தின் ஆரோக்கிய வளர்ச்சிக்கும் இது இப்போது அவசரமான தேவை ஆகும்.**

**இலங்கை, தனது இளம் சக்தியை இழக்காமல் காப்பாற்ற விரும்பினால், இந்த போதைப்பொருள் மாபெரும் அலைக்கு எதிராக இப்போது முழுமையான போர் தொடங்க வேண்டும்.**

# தமிழ் இனத்திற்கான தேர்தலாக இத்தேர்தலைக் கருதவேண்டும்

## சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு

(அபு அலா, மட்டு.துாரா)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழரசுக் கட்சிக்கு மூன்று நாடாளுமன்ற பிரதிநிதிகள் கிடைக்கப்பெறுவதற்கான ஆணையை எமது மாவட்ட மக்கள் வழங்கினார்கள். அதன் மூலம் எமது மக்களுடைய பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கான வழி வகைகளை எமது கட்சியும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் மிகச்சிறப்பாக முன்னெடுத்து வருகின்றதென மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

அதேபோன்று எமது மட்டு.மாநகர சபைக்குட்பட்ட மக்களின் தேவைகளையும், குறைபாடுகளை சிறப்பாக முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்றெண்ணி, உங்களது சீலாமுனை வட்டாரத்தில் இளம் துடிப்புள்ள ஒருவரான சுதர்சனை எமது கட்சி களமிறங்கியுள்ளது. அவரை வெற்றிபெறச் செய்து உங்களின் பிரதேச தேவைகளை நிவர்த்தி செய்ய கொள்ள முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தமிழரசுக் கட்சியின் 11 ஆம் வட்டார சீலாமுனை, பெரிய உப்போடை மற்றும் சின்ன உப்போடை வேட்பாளர் தநடராசா சுதர்சன் தலைமையில் சீலாமுனையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

மட்டு. மாவட்டத்திலுள்ள தமிழ் மக்கள் தமிழரசுக்கட்சிக்கு ஆணையை வழங்குவதற்கு தயாராக இருக்கின்றார்கள். ஏனென்றால் மாநகர சபையில் அதிகளவான வளங்கள் காணப்படுகின்றன. கடந்த 2023 ஆம் ஆண்டு மாநகர சபையினுடைய ஆட்சிக்காலம் முடிவடைந்ததன் பின்னர் சபைக்குள் இருந்த பல நிதிகளை, முன்னாள் ராஜாங்க அமைச்சர்களாக இருந்த பிள்ளையான் போன்றோர் கையாடல்களை செய்திருந்தார்கள்.



அதுமாத்திரமல்லாமல், மாநகர சபை எல்லைக்குள் இருக்கும் பல வளங்களை எடுத்து பல சட்ட விரோதமான செயல்களும் நடந்து இருக்கின்றன. இந்த விடயங்களில், கடந்த 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரை மட்டக்களப்பு மாநகர சபைக்குள் இருந்த இலங்கை தமிழரசு கட்சி சேர்ந்த உறுப்பினர்கள் மிக நேர்மையாக செயல்பட்டார்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, சீலாமுனை பகுதியின் ஆற்றங்கரையோரத்தை ஒரு சுற்றுலாத்தலமாக அபிவிருத்தி செய்வதான சிறந்த முன்மொழிவுகளை எமது வட்டார வேட்பாளர்கள் தெரிவு செய்திருக்கின்றார்கள். இவற்றை நடைமுறைக்கு கொண்டு வந்தால் மாநகர சபை எல்லைக்குள் வருமானங்களை அதிகரிக்கக்கூடிய சில திட்டங்களாக அவற்றை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

அந்தவகையில், இந்தத் தேர்தல் வட்டாரத் தேர்தலையும் தாண்டி, தமிழ் இனத்திற்கான ஒரு தேர்தலாக கருத்தில் எடுத்து இலங்கை தமிழரசுக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

# ஓட்டமாவடி சபையின் ஆட்சியைப் பெற்று தந்தால் பெரும் பரிசு உண்டு

## ரவூப் ஹகீம் இப்படிக் கூறுகிறார்

(பர்ஸான்)

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஓட்டமாவடி பிரதேச சபையில் எமக்கு கூடுதலான ஆசனங்கள் கிடைத்தும் ஆட்சி அமைக்க முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. எங்களது கட்சியில் போட்டியிட்டவர் மாறிப்போனதால் ஆட்சி கை நழுவிப் போனது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹகீம் தெரிவித்தார்.

ஓட்டமாவடி பிரதேச சபைக்காக உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வு வியாழக்கிழமை ஓட்டமாவடி பலநோக்கு கூட்டுறவு சங்க வளாகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் -

இம்முறை நடைபெறவுள்ள தேர்தலில் நீங்கள் ஓட்டமாவடி பிரதேச சபையின் ஆட்சியைப் பெற்றுத் தந்தால் அதற்கான பெரிய பரிசு காத்திருக்கிறது.

அதை நீங்கள் பெற்றுத் தரவேண்டும். அதன் மூலம் இந்தப் பிரதேசத்தை நான் கண்ணியப்படுத்தி, கௌரவப்படுத்த வேண்டும் எனும் ஆவலோடு காத்திருக்கிறேன்.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் நீங்கள் எல்லோரும் சேர்ந்து முஸ்லிம் காங்கிரஸுக்கு அளித்த வாக்குகளால்தான் எங்களுக்கு மேலதிகமாக ஓர் ஆசனம் கிட்டியது.

அந்த ஆசனத்தை சுழற்சி முறையில் பங்கிடுவது என்று நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேசத்தில் முஸ்லிம் காங்கிரஸின் அபிமானம், மீளக் கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது எனும் விவகாரத்தை நீங்கள் உரத்துச் சொல்ல வேண்டும் என்று ரவூப் ஹகீம் தெரிவித்தார்.

கல்குடாவுக்கு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசியப்பட்டியல் உறுப்பினரை வழங்குவது தொடர்பாகவே பெரிய பரிசு காத்திருக்கிறது என்று ரவூப் ஹகீம் மக்கள் மத்தியில் கூறியமை குறிப்பிடத்தக்கது.

# ஊழல் மோசடியில் ஈடுபட்டோர், படுகொலைகளில், ஈடுபட்டோர் ஆள் கடத்தலில் ஈடுபட்டோர், எவருக்கும் மன்னிப்புக் கிடையாது

## பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திர தெரிவிப்பு

(சக்திவேல்)

ஊழல் மோசடியில் ஈடுபட்டோர், படுகொலைகளில் ஈடுபட்டோர், ஆட் கடத்தல்களில் ஈடுபட்டோர், யாரும் இம்முறை தப்பிக்க முடியாது. அரசாங்கம் இந்த விடயத்தில் உறுதியாக இருக்கின்றது. நாம் சரியான விடயத்தை முன்வைக்கின்றோம். கடந்த காலங்களில் சட்டத்தில் இருந்த ஓட்டைகளைப் பாவித்து யாரும் தப்பித்தார்கள் என்றால் அது இனி வரும் காலங்களில் இடம்பெற முடியாது. என வெளிவிவகாரப் பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு களுதாவளை வட்டாரத்தில் போட்டியிடும் வேட்பாளருக்கான காரியாலயம் திறந்து வைக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது கலந்து கொண்டு கருத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த காலங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதேச அபிவிருத்தி குழு கூட்டங்களில் நடைபெற்ற சண்டை சச்சரவுகள் இப்போது நடைபெறுவதில்லை. ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் விவாதிப்பதற்கான நேரம் நாடாளுமன்றத்தில் தாராளமாக இருக்கின்றது. நாம் அந்த அரசியலை இதற்குள் கொண்டுவரத் தேவையில்லை. நாங்கள் நம்புகின்றோம். எதிர்வரும் காலங்களில் நடைபெற இருக்கின்ற இந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் நாம் அனைத்து பிரதேச சபைகளையும் கைப்பற்றுவோம். இந்த சபைகள் ஊடாக எமது அபிவிருத்தி பணிகளை மிகவும் வேகமாக துரிதமாக எடுத்துச் செல்ல நாங்கள் முயல்கின்றோம்.

குற்றச்சாட்டுகளை முன்வைத்துதான் நபர்கள் கைது செய்யப்படுகிறார்கள். அவர்கள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த விசாரணைகளின் அடிப்படையில்தான் கைதுகள் மேற்கொள்ளப்படுகின்றன. சில விசாரணைகளை அவதானித்தால் சிறிய குற்றச்சாட்டுகளாக இருக்கின்றன, சில விசாரணைகளை அவதானித்தால் நடுத்தரமான குற்றச்சாட்டுகளாக இருக்கின்றன, இன்னும் சில குற்றச்சாட்டுகளை பார்த்தால் மிகவும் பாரதூரமான குற்றச்சாட்டுகள் காணப்படுகின்றன, விசாரணைகளை மேற்கொள்கின்ற அந்தந்த நிறுவனங்கள், அமைப்புக்கள் அது தொடர்பான விடயங்களை மிகவும் தெளிவாகவும் நேர்த்தியாகவும் மேற்கொள்கின்றன.



இவ்வாறு கைது செய்யப்படுபவர்களை எதிர்த்தரப்பினர் அரசியல் பழி வாங்கல் என யோசிக்கின்றார்கள். என்று சொன்னால் நாம் கூறுவதெல்லாம் எதிர்க்கட்சியினர் இதுவரை காலமும் அவர்கள் ஊழல்களில் ஈடுபட்டிருந்தால் அதனை அவர்களாகவே ஒப்புக்கொள்ள வேண்டுமாறு நாங்கள் கூறுகின்றோம். இல்லாவிட்டால் இனிவரும் காலங்களிலாவது எந்த ஓர் ஊழல் மோசடியிலும் ஈடுபட வேண்டாம் என நாங்கள் தெரிவிக்கின்றோம்.

கைது ஐசெய்யப்படுபவர்கள் தொடர்பில் எந்தவித அரசியல் தடைகளும் இல்லை. நாங்கள் எந்தவித விசாரணைகளிலும் கைதுகளிலும் எதுவித தலையீடுகளையும் மேற்கொள்வதில்லை.

ஆனால் ஊழல் மோசடியில் ஈடுபட்டு படுகொலைகளில் ஈடுபட்டு ஆட் கடத்தல்களில் ஈடுபட்ட யாருக்கும் இம்முறை தப்பிக்க முடியாது அரசாங்கம் அந்த விடயத்தில் உறுதியாக இருக்கின்றது. நாம் சரியான விடயத்தை முன்வைக்கின்றோம். கடந்த காலங்களில் சட்டத்தில் இருந்த ஓட்டைகளை பாவித்து யாரும் தப்பித்தார்கள் என்றால் அது இனி வரும் காலங்களில் இடம்பெற முடியாது. இந்த ஊழல்வாதிகளுக்கு இந்த மோசடிக்காரர்களுக்கும் ஆட்கடத்தகாரர்களுக்கும் படுகொலை செய்தவர்களுக்கும் வாக்களிப்பதற்கு மக்கள் இருக்கின்றார்கள். ஏதோ ஒரு சந்தர்ப்பத்தால் அவர்கள் வாக்களிப்பதற்கு தள்ளப்பட்டு இருக்கின்றார்கள்.

மக்களுக்கு நாம் கூறிக் கொள்வதெல்லாம் தயவுசெய்துமீண்டும் அவ்வாறான குற்றவாளிகளுக்கு வாக்களிக்க வேண்டாம். மக்கள் மனதுகளை சரியான முறையில் தெளிவுபடுத்திக் கொண்டு மக்களுக்கான களம் சந்தர்ப்பத்தை எமது கட்சி வழங்கியிருக்கின்றது.

ஆகவே தேசிய மக்கள் சக்தி உங்களுக்கான கதவுகளை திறந்து வைத்திருக்கின்றது. என அவர் இதன்போது தெரிவித்தார்.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்றிட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

# பாப்பரசர் பிரான்சிஸின் மறைவிற்கு சர்வமத தலைவர்கள் இரங்கல் பதிவு

(ஸாகிர்)

பாப்பரசர் பிரான்ஸிஸின் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கும் முகமாக, தேசிய சர்வ மத குரு ஐக்கியத்தின் பிரதிநிதிகளான கௌரவ சாஸ்த்ரபதி கலாநிதி கலகம தம்மரன்ஸி நாயக தேரர், சிவ ஸ்ரீகலாநிதி பாபுசர்மா குருக்கள், அல்-ஹாஜ் அஷ்-ஸெய்யித் கலாநிதி ஹஸன் மௌலானா அல்-காதிரி மற்றும் கலாநிதி நிரான் சம்பத் குரே பாதிரியார் உட்பட சர்வமத தலைவர்கள், கொழும்பிலுள்ள இலங்கைக்கான வத்திக்கான் தூதரகத்திற்குச் சென்று, அங்கு வைக்கப்பட்டிருந்த இரங்கல் புத்தகத்தில் வெள்ளிக்கிழமை தமது இரங்கலைப் பதிவு செய்தனர்.



இதன்போது சர்வமத தலைவர்கள் தமது இரங்கல் கடிதத்தை வத்திக்கான் தூதரகத்தின் பேராயர் டிபிரையன் உடைய்க்வே அவர்களின் செயலாளர் கௌரவ லக்ஷ்மன் பெர்னாண்டோ பாதிரியாரிடம் கையளித்தமையும் குறிப்பிடத்தக்கது.

# சாய்ந்தமருதில் நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன

## உணவக உரிமையாளருக்கு எதிராக வழக்கு

(நூருல் ஹுதா உமர்)

பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப் பெற்ற கியு ஆர் கோட் மூலமான முறைப்பாட்டினைத் தொடர்ந்து அதன் உண்மைத்தன்மையை அறிய சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட உணவகத்தில் நேற்று (சனிக்கிழமை) திடீர் சோதனை செய்யப்பட்டது.



சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம். ஜெரின் அவர்கள் உடனடியாக செயற்பட்டு உணவு கையாளும் நிறுவனத்தை பரிசோதனைக்கு உட்படுத்தினார்.

இதன் போது குறித்த நிறுவனத்தில் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற முறையில் சேமிக்கப்பட்டிருந்த மற்றும் விற்பனைக்காக வெளிக்காட்டப்பட்டிருந்த உணவுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டு உணவக உரிமையாளருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது எமது கடமையும், பொறுப்பும் ஆகும். ஆகவே உங்களது முறைப்பாடுகளை உரிய ஆதாரங்களுடன் எங்களுக்கு அறியத்தாருங்கள் கியு ஆர் கோட் ஊடாக வழங்கப்படும் பட்சத்தில் விரைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.






# வவுனியாவில் நடந்த விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் சாவு

வவுனியா, மூன்று முறிப்பு பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா நகரில் இருந்து மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் பாரவூர்தி ஒன்றில் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் படுகாயமடைந்த அவர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

சம்பவத்தில் வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் லக்ஸ்மன் பண்டார என்ற பொலிஸ் உத்தியோகத்தரே சாவடைந்துள்ளார்.

அவரது மரணம் தொடர்பான விசாரணையை வவுனியா பொலிஸார் மற்றும் திடீர் மரண விசாரணை அதிகாரி ஹரிபிரசாத் ஆகியோர் முன்னெடுத்திருந்தனர். 100

# பாப்பரசர் நினைவாக துக்கதினம் அனுஸ்டிப்பு

## வவுனியாவில் சோகம்

வவுனியாவில் பாப்பரசர் நிஷ்வாக துக்கதினம் அனுஸ்டிக்கப்பட்டது.

கத்தோலிக்கத் திருச்சபையின் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் அடிகளாரின் மறைவையடுத்து நேற்று (சனிக்கிழமை) நாடு பூராகவும் துக்க தினம் அனுஸ்டிக்கப்படுகிறது.

அந்தவகையில், வவுனியா மாவட்ட செயலகத்தில் துக்க தினம் அனுஸ்டிக்கப்பட்டது.

இதன்போது மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர அவர்களால் தேசிய கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டதுடன், பாப்பரசர் நினைவாக மெழுகுவர்த்தி தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் கத்தோலிக்க மதகுருமார், மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர், மாவட்ட செயலக உத்தியோகத்ர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். 100

# ஒலிம்பியாட் – 2025 போட்டியில் அல் ஹிக்மா மாணவன் சாதனை

(ஹலால்தீன் )

கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட 2025 ஆண்டுக்கான வானியல் மற்றும் விண்வெளி விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில், கிண்ணியா அல் ஹிக்மா முஸ்லிம் மகா வித்தியாலய மாணவன் வெற்றி பெற்றுள்ளார்.

தரம் 08 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் எம்.ஆர்.எம். றிபாத் எனும் மாணவனே இவ்வாறு வெற்றி பெற்றுள்ளார்.

மாகாண மட்டத்தில் நடைபெற்ற போட்டியில் மூன்றாம் இடம் பெற்றே இந்த சாதனை படைத்துள்ளார்.

மேலும், வானியல் மற்றும் விண்வெளி விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிகளில் வெற்றிபெற்ற எம்.எப். லீன் ஸஹ்தா (தரம் - 09), எம்.ஆர்.எம் ரிபாத் (தரம் - 08), டபிள்யு.எம். தவா (தரம்- 07), ஏ.எம். அபீப் (தரம் - 07) ஆகிய மாணவர்களும் வலய மட்டத்தில் கலந்து கொண்டு வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

இந்த வெற்றியை பெற, இம்மாணவர்களை தயார்ப்படுத்திய அனைவருக்கும் நன்றிகளையும் வாழ்த்துகளையும் பாடசாலை அஹமட் நஷ்ரப் தெரிவித்துள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

# உள்ளாட்சி தேர்தல் 2025

# தமிழ் அரசுக் கட்சியுடன் இணைந்து செயற்பட நாங்கள் முயற்சித்தோம்

## கலையரசன் தடையாக இருந்தார் என்கிறார் ஹக்கீம்

(நூருல் ஹுதா உமர்)

சம்மாந்துறைபிரதேசசபையின்எல்லைகள்பிரித்தது நிறைய பிரச்சினைகளை கொண்டது. அவற்றில் வீரமுனை வட்டாரம் நிறைய பிரச்சினைகளை கொண்டது. அவற்றுக்கு தீர்வு காணும் மாற்று வழியாக நடைபெறும் சம்மாந்துறை பிரதேச சபை தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியில் எங்களின் வேட்பாளரை போட்டியிடச் செய்து அவர்களின் உடன்பாட்டுடன் அந்த வட்டாரத்தை வெல்ல வைக்க முடியுமா என்ற முயற்சியையும் இம்முறை செய்து பார்த்தோம். இதே போன்ற பிரச்சினை நாவிதன்வெளியிலும் இருந்தது. இந்த விடயங்களில் தமிழ் அரசு கட்சியின் தலைமைகள் இணக்கம் தெரிவித்தன. துரதிஷ்டவசமாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கலையரசன் இணங்கவில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

சம்மாந்துறை பிரதேசசபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மரம் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர் -

சம்மாந்துறை பிரதேச சபையின் வீரமுனை வட்டாரத்தில் நிர்மாணப்பணி ஒன்று தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கொன்று இருந்த போதிலும் மு.கா செயலாளர் நிஸாம் காரியப்பரை அந்த வழக்கில் ஆஜராக வேண்டாம் என்றும் சொல்லியிருந்தேன். ஏனெனில் இந்த வியத்தை சாதித்து கொள்வதற்காக. அவை ஒன்றும் சாத்தியமாகவில்லை. ஏனெனில் சென்ற தடவை கூட நாங்கள் ஆட்சியை கைப்பற்றுவதில் அந்த வட்டாரத்தால் நிறைய குளறுபடிகள் ஏற்பட்டன என்பது எல்லோருக்கும் தெரியும். - என்றார்.

மேலும், தொலைபேசி சின்னம் (ஐக்கிய மக்கள் சக்தி) செத்து போகிவிட்டது. அவர்களுடனான உறவு, இந்தத் தேர்தலில் மட்டுமல்ல இனிவரும் தேர்தல்களிலும் அவர்களுடனான உறவை பற்றி



இன்னும் சிந்திக்க வேண்டியுள்ளது. தொலைபேசி சின்னத்துக்கு இங்கு வாக்களிக்க சொல்ல இன்னும் நாங்கள் தயாராக இல்லை. கண்டி மாவட்டத்தில் தனித்து கேட்கும் தீர்மானத்தை எடுத்துள்ளேன். வேட்பாளர்களினதும், அமைப்பாளர் களினதும் மன்றாட்டம்காரணமாக 03 இடங்களில் மட்டும் நாங்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் எங்களின் வேட்பாளர்களை களமிறக்கி உள்ளோம். 11 இடங்களில் தனித்து

# இந்தத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கவில்லை என்றால் 5 வருடங்களுக்கு பெரு நஷ்டம்

## அக்கட்சியின் வீரமுனை வட்டார வேட்பாளர் றிசாத் தெரிவிப்பு

(தில்சாத் பர்வீஸ்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட்டு வேட்பாளர்களின் வெற்றியை உறுதிசெய்யும் மாபெரும் பிரச்சார கூட்டம் சம்மாந்துறையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதன் போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் வீரமுனை வட்டார வேட்பாளர் கே.ஆர்.எம். றிசாத் கருத்து தெரிவிக்கையில் -

எதிர்வருகின்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வீரமுனை வட்டாரத்தில் சகோதரர் நௌ-ாட் களம் இறங்குவார்கள் என்று அறிந்தும் தைரியமாக இத்தேர்தலில் களம் இறங்க துணிந்தவன் நான்.

இத்தேர்தலில் வீரமுனை வட்டாரத்தில் நான் களம் இறங்க வேண்டும் என்று மக்களின் கோரிக்கைக்காகவே இத்தேர்தலில் களம் இறங்கியவன் நான் என்ற வகையில் உங்களுடைய நம்பிக்கையை நான் இன்னா அல்லாஹ் காப்பாற்றி ஆகுவேன் என்று தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவிக்கையில் -

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம். மன்சூர் கடந்த பொதுத்தேர்தலில் தேசிய மக்கள் சக்தி பற்றி மிகவும் நேர்த்தியாக கூறியிருந்தார். ஆனால் நாம் தேசிய மக்கள் சக்தி எனும் மாய வலையினுள் இருந்தால் அது எமக்குத் தெரியாமல் போய் இருந்தது.

ஆனால் இன்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை கொண்டு வந்தவர்களுக்கு எங்களுடைய அரசாங்கம் என்று சொல்லுவதற்கு வெட்கமான நிலைமை ஏற்படும் நிலை இருக்கிறது.

சம்மாந்துறை இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெறும் ஊர். ஆனால் இந்த வாய்ப்பை கடந்த தேர்தலில் நாம் இழந்து நிற்கின்றோம். மீண்டும் அந்த சந்தர்ப்பம் வருமா என்னுகின்ற கவலை இருக்கின்ற போது கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் நிறுத்தப்பட உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இன்று நடைபெற்ற இருக்கின்றது. ஏன் என்றால் எங்களுடைய ஊருக்கு அதிகாரம் தேவை என்பதால் தான் நான் கூட இத்தேர்தலில் போட்டியிடுகிறேன்.

ஒரு தனிநபரின் விருப்பத்திற்காக எல்லோரும் எல்லா வட்டாரங்களையும் விட்டு விட்டு அவருடைய வட்டாரத்தில் ஒட்டுமொத்தமாக நிற்கின்றார்கள் அவர் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக. ஆனால் நிச்சயமாக முதலில் தோல்வி அடைகிறது வேட்பாளராக இருக்கின்றவர் அக்கட்சியின் முதன்மை வேட்பாளராகத்தான் இருப்பார் எனக் கருத்துத் தெரிவித்தார்.

# சிங்களப்பிள்ளைகளுக்கு எனது பெயரை வையுங்கள்

## அமைச்சர் பிமல் ரத்நாயக்காவுக்கு சத்தியலிங்கம் பதிலடி

சிங்களவர்களுக்கு பிறக்கின்ற பிள்ளைகளுக்கு சத்தியலிங்கம் என பெயரை வையுங்கள் என இலங்கை தமிழ்அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின், ஊடகவியலாளர் ஒருவர் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க அவர்கள் ஆனையிறவு உப்பு விடயத்தில் பெயரை பார்க்க வேண்டாம். சுவையை பாருங்கள் எனக் கூறியுள்ளமை தொடர்பில் கேள்வி எழுப்பிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உப்பில் ருசியைத் தான் பார்க்க வேண்டும். அது தான் உண்மை. ஆனால் உங்களுக்கு பிறக்கின்ற பிள்ளைகளுக்கும் சத்தியலிங்கம் என்று பெயரை வையுங்கள். ஏன் ரத்நாயக்கா, விமல் வீரவன்ச, அந்த வன்ச, இந்த வன்ச என பெயரை வைக்கிறீர்கள்.


சத்தியலிங்கம், சுந்தரலிங்கம், பொன்னம்பலம் என உங்களது பிள்ளைகளுக்கும் பெயரை வையுங்கள். ஏன் என்றால் உங்களுக்கு பிள்ளை தானே வேணும். பெயர் முக்கியமில்லை தானே. அதற்கு பிறகு நாங்கள் வாயை மூடிக் கொண்டு இருக்கின்றோம் எனத் தெரிவித்தார். 100


# காத்தான்குடி நகர சபையில் போட்டியிடும் வேட்பாளர்களுடனான கலந்துரையாடல்

(சினீஸ் கான்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், காத்தான்குடி நகர சபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக போட்டியிடும் வேட்பாளர்களுடனான விடே கலந்துரையாடல் வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய தலைவர் ரவூப் ஹக்கீம் (நா.உ) மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவர் கலாநிதி எம்.எஸ்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் (நா.உ.)





ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

இதன்போது, கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், காத்தான்குடி நகர சபை வேட்பாளர்கள், கட்சி முக்கியஸ்தர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# வவுனியாத் தேர்தல் கூட்டத்தில் ஜனாதிபதி அநுரகுமார பங்கேற்பு

வவுனியாவில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்;தில் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க கலந்து கொண்டார்.

வவுனியா மாநகர சபை உள்ளிட்ட 5 உள்ளூராட்சி மன்றங்களிலும் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்வதற்கான பிரச்சாரக் கூட்டம் வவுனியா மாநகரசபை மைதானத்தில் நேற்று (சனிக்கிழமை) மாலை இடம்பெற்றது.

வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து அதிகளவிலான மக்கள் குறித்த கூட்டத்திற்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

இதில் விசேட அதிதியாக ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க கலந்து கொண்டு உரையாற்றியதுடன், வேட்பாளர்கள், பொது மக்களுடனும் கலந்துரையாடியிருந்தார். இதன்போது பொதுமக்கள் ஜனாதிபதிக்கு கைகொடுத்து செல்பி எடுப்பதற்கு முண்டியடித்துக் கொண்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

இதில் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன், வேட்பாளர்கள், மதகுருமார், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். 100

# மக்களைச் சமத்துவமாக நடத்தினால் இனரீதியாக கட்சிகள் தேவையில்லை

## அதற்கான பொறுப்பு அரசுடையது என்கிறார் சத்தியலிங்கம்

மூவின மக்களும் இந்த நாட்டில் எப்போது சமமாக மதிக்கப்படுகின்றார்களோ அன்று தான் தமிழ்கட்சி சிங்களகட்சி, முஸ்லிம் கட்சி என்ற தேவை இருக்காது. அந்த நிலையை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்றதந்தை செல்வநாயகத்தின்நினைவுதின நிகழ்வில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

மோகம் 30 நாள் என்று சொல்வார்கள். அந்த மோகத்தில் வந்த ஒரு கட்சி தாங்கள் தான் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுடைய ஒட்டு மொத்த பிரதிநிதிகள் என்று சொல்கிறார்கள். ஒரு தேர்தலில் வென்றுவிட்டு அப்படி சொல்ல முடியாது. இந்த தேர்தல் முறையால் மாத்திரமே அவர்கள் வென்றார்களே தவிர, ஒட்டுமொத்த தமிழ் மக்களின் மனங்களையும் கவர்ந்து வெல்லவில்லை.

இந்தநாட்டில்மாற்றம்ஒன்றுஏற்படவேண்டும் என்று இலங்கை மக்கள் விரும்பினார்கள். இந்த நாட்டை தொடர்ச்சியாக ஆண்டவர்கள் நாட்டின் தேசிய வளங்களை பயன்படுத்தி நாட்டு மக்களை பிச்சைக்காரர் ஆக்கினார்கள். எனவே, மக்கள் மாற்றம் ஒன்றை விரும்பி இந்த அரசை கொண்டு வந்தார்கள். அந்த மாற்றத்தை நாங்களும் எதிர்பார்க்கின்றோம்.



இந்த நாடானது ஊழற்ற சிறந்த நிர்வாகத்தை கொண்ட, கொள்ளையடிக்காதவர்களை கொண்ட ஓர் அரசாக இருக்க வேண்டும் என்பது ஒட்டு மொத்த இலங்கை மக்களின் அவா. அந்த விருப்பம் எமக்கும் இருக்கிறது. தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்று சேர்ந்து இந்த நாட்டை நிர்வகிக்க முடியாது. நாங்கள் எண்ணிக்கையில் சிறுபான்மையாக இருக்கிறோம்.

தமிழ் மக்களின் பிரச்சனை நீண்டகால பிரச்சினை. எனவே தமிழ் தேசிய பிரச்சினையைத் தீர்க்க யார் முன் வருகின்றார்களோ அவர்களுடன் இணைந்து பயணிக்க நாம் தயாராக இருக்கிறோம்.

ஆனால், இந்த அரசு தெரிவு செய்யப்பட்ட ஆறு மாதத்திலேயே அவர்களது பயணம் வித்தியாசமாக இருக்கிறது.

மூவின மக்களும் இந்த நாட்டில் எப்போது சமமாக மதிக்கப்படுகின்றார்களோ அன்று தமிழ்கட்சி சிங்களகட்சி, முஸ்லிம் கட்சி என்ற தேவை இருக்காது. அந்த நிலையை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதனை நம்பியே மக்கள் வாக்களித்தனர்.

எனவே குறுகிய நோக்கத்திற்காக மக்களை நீங்கள் ஏமாற்றினால் இந்த நாடு ஒரு நாளும் மீட்சியடையாது எனத் தெரிவித்தார். 100

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு
•CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
•NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
•வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
•ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
•GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDr
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர் Kalaikkathir

# தந்தையை இழந்து வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற பிள்ளைகளும் ஏனையோரைபோல் சிறக்க வேண்டும்

## சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் இஸ்ஸடீன் தெரிவிப்பு

(அபு அலா)

பொத்துவில் பிரதேசத்தில் தந்தையை இழந்து வறிய கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்களின் பிள்ளைகளும் ஏனைய பிள்ளைகளைப் போன்று கற்றல் மற்றும் விளையாட்டுத்துறை போன்ற செயற்பாடுகளில் சிறந்து விளங்க வேண்டும் என்ற நோக்கில் பல முன்னெடுப்புகளை முன்னெடுத்து வருகின்றோம் என்று அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியும், கழகத்தின் பிரதம ஆலோசகரும், சமூக சேவையாளருமான வைத்தியர் ஏ.எம்.எம்.இஸ்ஸடீன் தெரிவித்தார்.

பொத்துவில் மத்திய விளையாட்டுக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே




அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

தந்தையை இழந்து வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் பிள்ளைகளுக்கு படிக்க வேண்டும் என்ற எண்ணம், ஆசை இருந்தாலும் அவர்களின் குடும்ப சூழ்நிலை காரணமாக கல்வியை இடைநடுவில் நிறுத்திவிட்டு பெரும்பாலும் வேலைக்கமர்த்தப்படுகின்றனர். அந்தப் பிள்ளைகள் நன்கு கவனிக்கப்பட வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

மேலும், பாடசாலை செல்லாமல் இருக்கும் பிள்ளைகளுக்கான கல்வி பெறும் உரிமை கட்டாயம் அளிக்கப்பட வேண்டியுள்ளது. அவர்களின் வளர்ச்சி, விருத்திக்கு அவசியமான சுகாதார நலனோம்பல் விடயங்களும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். - என்றார்.

தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் குடும்பங்களைச் சேர்ந்த 50 வரிய குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பதற்கான நிதியுதவியை அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியும், கழகத்தின் பிரம ஆலோசகரும், சமூக சேவையாளருமான வைத்தியர் ஏ.எம்.எம்.இஸ்ஸடீனின் சொந்த நிதியில் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# தொடர் சாதனைகளைப் படைத்து வரும் பிறைந்துறைச்சேனை சாதுலியா மாணவர்

(பர்ஸான்)

விளையாட்டுத் துறையில் பிறைந்துறைச்சேனை சாதுலியா வித்தியாலய மாணவர்கள் தொடராக சாதனைகளை நிலை நாட்டி வருவதாக பாடசாலை அதிபர் எம்.எஸ்.நிஜாம்தீன் தெரிவித்தார்.

அந்தவகையில், நடைபெற்று வரும் கோட்டமட்ட விளையாட்டுப் போட்டியில் சாதுலியா வித்தியாலய 16 வயதுக்குட்பட்ட கரப்பந்தாட்ட அணியினர் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், 18 வயதுக்குட்பட்ட உதைப்பந்தாட்ட அணியினரும் கோட்டத்தில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.




தங்களது திறமைகளை திறன்பட வெளிக்காட்டிய மாணவர்களுக்கும் மாணவர்களை பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும், ஒத்துழைப்புக்களை வழங்கிய பெற்றோர்களுக்கும் அதிபர் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.04.2025இல் வெளியிடப்பெற்றது